

# பறவையின் உடையா நிழல்

ஜமீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமீல்

# பறவையின் உடையா நிழல்

புதுப் புனைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பறவையின் உடையா நிழல்**

■**கவிதைகள்** ■**ஆசிரியர்:** ஜமீல், ■**விலாசம்:**124A, ஸ்டார் வீதி, பெரியநீலாவணை, மருதமுனை தொ.இல: 077 9689392 ■**©:** அப்துல் றகுமான் அப்துல் ஜமீல் ■**முதற் பதிப்பு:** 2021 ■**வெளியீடு:** புதுப்புனைவு பதிப்பகம் ■**அச்சுப்பதிப்பு:** எக்ஸலன்ட் பிரின்டர்ஸ் ■**அட்டை, பக்க வடிவமைப்பு:** எம்.ஏ.எம். அஸ்மி தொ.இல: 075 7022680, ■**பக்கங்கள்:** 84, ■**விலை:** 400/= ■**ச.த.நூல். இல:** 978-624-98763-0-9

**Paravayin Udaiya Nilazh**

■**Poems** ■**Author**: Jameel, ■**Address**: 124A, Star Road, Periyaneelavanai, Maruthamunai T.P 077 9689392 ■©: Abdul Rahuman Abdul Jameel ■**First Edition**: 2021 ■Publication: Puthu punaivu Publication ■**Printing**: Excellent Printers ■**Layout & Cover Designed**: M.A.M. Asmy T.P: 075 7022680 ■**Page**: 84, ■**Price**: 400/- ■**ISBN**: 978-624-98763-0-9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவையின் உடையா நிழல்

## ஜமீல் (1969)

இயற் பெயர் அப்துல் றகுமான் அப்துல் ஜமீல். கிழக்கிலங்கையின் அம்பாரை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மருதமுனைக் கிராமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

தற்போது அதே கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமை புரிந்து வருகிறார். 1990 களில் ஆக்க இலக்கியச் செயற்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட இவர் இதுவரை 08 கவிதை பிரதிகளை வெளியீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது இவருடைய ஒன்பதாவது பிரதியாகும்

124 ஏ, ஸ்டார் வீதி
பெரியநீலாவணை-01
மருதமுனை
இலங்கை

கைபேசி : 077 96 89 39 2
மின்னஞ்சல் : jameel2013a@gmail.com
முகநூல் : Abdul Jameel



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன்பும் தீரா நன்றியும்

வனம், நடு, நெய்தல், கொலுசு, காற்றுவெளி, கோடுகள், காமதேனு, கலகம் ஆகிய மின்னிதழ்களுக்கும்

படிகள், கலைமுகம், ஜீவநதி, அல்-ஹஸனாத், வழித்தடம், காற்புள்ளி, இலக்கிய வெளி ஆகிய சிற்றிதழ்களுக்கும்

தினகரன், தமிழன், தினக்குரல், தீம்புனல், வீரகேசரி முதலான பத்திரிகைகள்

நஸார் இஜாஸ், லார்க் பாஸ்கரன், ஃபாயிஸா அலி, ஏ.எம்.குர்ஷித், டீன்கபூர், காமிஸ் கலீஸ், ஏ.நஸ்புள்ளாஹ், ஜே.பிரோஸ்கான், அம்ரிதா ஏயெம், நெளபல், அலறி, எம்.ஏ.எம். அஸ்மி

உடன் பிறப்புகளான சமட், ஜவாத், கபீழ், அன்சார், மலீக் அத்தோடு, அன்பு பிள்ளைகள் றபா அகமட், ஷரீன், ஹயா, மைத்துனர் ஜே.எம் நெளபாஸ் விசேடமாக என் இணை நௌஸிலாவிற்கும் சொல்ல மறந்தவர்களுக்கும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இது**

அபூபக்கர் நஜீம் ஆசிரியர் அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலசலத்தோடும் கவிதை நதிக்குள் உயிர்த்தெழும் பறவையின் உடையா நிழல்

எஸ். பாயிஸா அலி

கவிதை என்பது "ஒரு வகையான போலச் செய்தல்" என்பார் அரிஸ்டோட்டில். "கற்பனையின் வெளிப்பாடே கவிதை" என்பார் செல்லி. 'கவிதையென்பது ஆன்மாவைத் தொட்டு சிறிது நேரம் சலனத்தை ஏற்படுத்தி எட்டாத இடத்தில் நம்மை தூக்கி நிறுத்தி ஓரளவு இனிப்பான வேறோர் வாழ்வை தர வேண்டும்' என்றும் எங்கோ வாசித்ததாக நினைவு.

உண்மையில், கவிஞர் ஜமீலின் 'பறவையின் உடையா நிழல்' எனும் இக்கவிதை நதிக்குள் உயிர்த்தெழும் எல்லா கவிதைகளுமே ஒரு வகையான போலச் செய்தல் செயற்பாடாகும். ஆன்மாவைத் தொட்டு சலனத்தை ஏற்படுத்தும் உணர்வுபூர்வமான வெளிப்பாடாகவும் இவை அமைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கவிதைகளோடு மாத்திரம் அவரது இலக்கிய முயற்சிகளை சுருக்கிக் கொள்ளாது சிறுகதைத் துறையிலும் நாட்டம் கொண்டு பல்வேறு சிறுகதைகளையும் எழுதி குவித்திருக்கிறார். விரைவில் அவரது சிறுகதைத் தொகுப்பு ஒன்றும் வெளிவர இருப்பது வாசகர்களுக்கு ஓர் உவப்பான செய்தியாகும்.

சகோதரர் ஜமீலின் 'பறவையின் உடையா நிழல்' என்ற இந்த அழகான கவிதைத் தொகுப்பிலும் 72 கவிதைகள் நமது பார்வையில் சிலவேளை முக்கியத்துவம் அற்றதாகக்கூட கருதிப் புறக்கணித்திருக்கும் சின்னச் சின்ன கண நிகழ்வுகளையும் அவர் என்னவொரு அழகோடு தன் கவிதைக்குள் பத்திரப்படுத்தியிருப்பார். அவரின் கவிதை செயற்பாட்டினூடாக குறித்த சிறு துணுக்குகள் நம் பார்வையில் நட்சத்திரமாய் ஒளிர்வதை ஆச்சரியத்தோடுதான் நோக்க வேண்டியிருக்கின்றது.

உண்மையில் எந்த ஒரு படைப்பாளனும் தான் அனுபவித்த, தன்னைப் பாதித்த நிகழ்வுகளை தன் ஆழ் மனதில் பதித்து வைத்திருப்பார்கள். பின்னாளில் அதற்கு கலை வடிவம் கொடுத்து கவிதை, சிறுகதை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல், இலக்கியம் சொல்லும் உட்பொருளை முழுமையாக உணர வேண்டுமெனில், படைப்பாளர் தன் உணர்வின் எந்தப் புள்ளியிலிருந்து எழுதினாரோ அதே உணர்வுப் புள்ளியில் இருந்துதான் வாசகரும் படிக்க வேண்டும். இரு பிரிவினரும் ஒரே நேர்கோட்டில் பயணப்பட்டால்தான் அந்தப் படைப்பாளரின் படைப்பின் முழு உணர்வையும் வாசகரால் பெற்றுணர முடியும்.

ஆனாலும், இது எந்தளவிற்கு எல்லாக் கவிதைகளிலும் சாத்தியம் என்று கூறமுடியாது. இன்றைய காலகட்ட வாசிப்பில் சுருக்கம், நவீனம் கடந்த நிலை என்பவற்றிற்கூடாக எழுதப்படும் பல புதிய கவிதைகள், கவிதைக்குள் வாசகர் உள்நுழையும் எந்த வழியையும் ஏற்படாமல் அடைத்தபடி தனித்துவம் தொடங்கி இருக்கின்றன. இவை ஒருவகை புதிர் போலவும் தென்படுகின்றன. என்றாலும், கவிஞர் ஜமீலின் பெரும்பாலான கவிதைகள் அவரின் வாழ்க்கை அனுபவ வெளிப்பாடாகவும், எவரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் ஆகக் குறைந்தது கவிதையின் ஓரிரு வரிகளிலேனும் அழகியல் சார்ந்த கவிதை மொழி பளீரிடும் வகையிலும் அமைந்திருப்பது அவருக்கேயான தனித்துவ இயல்பாக கொள்ளலாம்.

எழுத்தாளர் அம்ரிதா ஏயெம், ஜமீலின் கவிதைகள் “எளிதில் நொறுக்கப்படக் கூடிய விளிம்பு நிலையில் உள்ள பெண்கள், சிறுவர்களின் தேவைகள், பிரச்சினைகள் பற்றி யாரும் பெரிதாக கவனமெடுப்பதுமில்லை, பாடுவதும் இல்லை, பாடுபொருளாகக் கொள்வதுமில்லை. கவிஞர் ஜமீல் நீண்ட காலமாக சிறுவர்கள் தொடர்பில் தனித்து கவனம் செலுத்துபவராக இருந்து வருகிறார். சிறுவர்களின் விருப்பு, வெறுப்பு, ஆசை, பாசம், கோபம், கவலை, ஏக்கம், அவதானம், கற்பனை, வகுப்பறை வழி நடத்தல், காவோலை, குருத்தோலை நடத்தைகள், துஷ்பிரயோகம், உளவியல் பிரச்சினைகள், குழந்தைகளுக்கும் இயற்கைக்குமான உறவு, பிரிவு போன்றவைகள் அதீத செப்பமான கட்டுக்களுள்ள மொழியினால் உயர் தரத்திலான ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருக்கின்றன” என ஏற்கனவே குறிப்பிட்ட அழகான வரிகள் இத்தொகுப்பிற்கு மிகச் சரியாக பொருந்தியிருப்பதை அவதானிக்கலாம்.

தேர்ந்த இலக்கியத்தின் குறியீட்டுப் படிமங்களை தன் இலக்கியத்தினூடாக பரிசளிக்கும் கவிஞர் ஜமீலின் கவிதைகள் காலம் கடந்தும் பேசப்படும் என்பதே நிதர்சனமாகும்.

03.12.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள் அற்புதங்களை நிகழ்த்தும்

ஜமீல்

கவிதையால் அதிக பட்சம் என்ன சாதிக்க முடியுமென கருதுகிறீர்கள்?

நெரிசலும் அலைச்சலுமிக்க வாழ்வை சமாளிக்கும் ஆற்றல் மிக்கதா கவிதை? அது உன் தலைவிதியை மாற்றி அமைக்குமென நம்புகிறாயா? அத்தனை மந்திரம், மாயமும் மிக்கதா கவிதை? ஒரு வன்புணர்வை கண்டித்து எழுதிக் கொண்டிருக்கும்போது எண்ணற்ற வன்புணர்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஒரு படுகொலையை எதிர்த்து எழுதும்போது நிறைய தலைகள் உருளுகின்றன. மழை வேண்டி எழுதும்போது மரங்களின் பண்ணைகள் திட்டமிட்டு கொலை செய்யப்படுகின்றன. காட்டு அரசனைக் கண்டித்து பாடும்போது பறவைகள், விலங்குகளுக் கிடையில் கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்படுகிறது.

இத்தனைக்கு மத்தியிலும் கவிதையால் ஏதேனும் மாற்றம் நிகழுமென நம்புகிறீர்களா? ஒரே இரவில் உலகை புரட்டிப் போடும் வல்லமையும் சக்தியும் மிக்கதா கவிதை? ஆதியிலிருந்து வேத நூல்கள் புகட்டா உபதேசங்களையா கவிதைகள் சொல்லி விடப் போகிறது என்ற கேள்விகளும் ஐயங்களும் எனக்குள் ஆதியிலிருந்து எழுந்தாலும் அது அற்புதங்களை நிகழ்திக் காட்டுமென நான் திடமாக நம்புகிறேன். உங்களுக்கு எப்படியோ?

**01.12.2021**
**பின்னிரவு 11.30**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவை வெளி


- திறந்து கிடக்கும் மனசின் கதவுகள் 1
- கதவிடுக்குகளினிடை நசிபடும் புள்ளப் பூச்சி 2
- அர்த்தமற்று வளரும் பிணக்கு 3
- இரவின் அமைதியை உடைக்கும் பாடல் 4
- வெருட்டி 5
- உடையக் காத்திருத்தல் 6
- இரவை திறந்து படித்தல் 7
- தவறி விழும் நிலவு 8
- குழந்தையற்ற அம்மா 9
- முயல் குட்டியென மேயும் காலை வெயில் 10
- வானத்தை தகர்த்த சிறுவன் 11
- பாரமேற்றி வைத்த சொற்கள் 12
- தொந்தரவு செய்யும் ஓவியம் 13
- சமரசம் நிலவும் மனது 14
- தனிமையினை சமாளிக்கும் சிறுமியின் ஓவியம் 15
- களவாடப்படும் நிழல்கள் 16
- பூக்களின் தேவதை 17
- புகைப்படத்தில் அழும் குழந்தை 18
- சிறுமியின் உடைந்த குடை 19
- என் கண்களுக்குள் நீந்தும் மீன்கள் 20
- துணைக்கு வரும் ஒற்றையடிப் பாதை 21
- சிறுமி கசக்கியெறிந்த மரம் 22
- மழையை வாசிக்க அவாவுறும் குழந்தைகள் 23
- வானத்தை கடந்த சிறுமி 24
- அலை 25
- தனிமையிலிருக்கும் குடை 26
- கண்கள் பேசும் மொழி 27
- கீரையென வாடும் அப்பாவின் மனசு 28
- வீட்டைச் சுற்றி ஓடும் மனசு 29
- பசி 30
- மனதுக்குள் கொதிப்புறும் சொல் 31
- வனத்தின் வரைபடம் 32
- காலம் 33
- கடலின் நிறம் மேகமா 34
- பறவைகளால் அளக்க முடியா ஆகாயம் 35




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சருகை வாசித்த பறவை 36
- தேநீரில் இனிப்பென கலந்திருக்கும் அன்பு 37
- வனத்தை தரிசித்தல் 38
- சொற்களை திறந்து விடுதல் 39
- ஈரமற்றதா நதி 40
- நதியும் சேர்ந்ததுதான் கடல் 41
- அன்பெனும் பேரலை 42
- உடைந்து சிதறிய இரவு 43
- புல்லில் பனியெழுதி 44
- இலைகள் சேகரிப்பவன் 45
- சொற்கள் எத்தகையது 46
- வாழ்வை அருந்தும் மது 47
- மரங்களின் மொழி 48
- மீன் பிடிக்கத் தெரியா சிலந்திகள் 49
- பறவையின் உடையா நிழல் 50
- பட்டாம் பூச்சியின் ஓவியம் போலான வாழ்வு 51
- ஓவியமாகிய சொற்கள் 52
- ஆசிரியமாகும் சிறுமி 53
- பட்டாம்பூச்சியின் மனசு 54
- சந்திக்க அலைவுறும் மரணம் 55
- முத்தமிட்ட மழை 56
- குட்டி ஈன்ற கதை 57
- அப்பாவை சிரிக்க வைக்கும் சிறுமி 58
- பங்கிடுதல் 59
- மழையை புரிதல் 60
- கானல் நீரில் தொலையும் வாழ்க்கை 61
- ஜன்னலின் வழியே 62
- ஒன்றிப் போதல் 63
- எழுதித் தீர்க்கப்படாது தீட்டி முடிக்கும் பென்சில்கள் 64
- காலத்தின் சிலந்தி வலை 65
- சிறகடிக்கும் கடல் 66
- சிறுமியின் அச்சம் 67
- இருளை வாசிக்கும் குழந்தைகளின் சிரிப்பு 68
- ஒரு துண்டுக் கடல் 69
- இருளை வாசித்த ஹயாவின் ஓவியம் 70
- ஓவியம் வரையும் பட்டாம்பூச்சிகள் 71
- பஞ்சு மிட்டாய் விற்பவன் 72




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறந்து கிடக்கும் மனசின் கதவுகள்

ஊடாட்டம் எதுவுமற்றதொரு சூழலில்
இருவரும் அருகருகில்
பதட்டத்துடன் அமர்ந்திருக்கிறோம்
பேரமைதி நிலவும் இந்நேரம்
ஒரு நத்தையைப் போன்று
மெதுமெதுவாய் நகர்ந்து செல்கிறது அந்தி
இருள் படரும் முன்பாக
நாம் கலைந்து செல்ல வேண்டும்
ஒரு பூச் செடியைப்போல
நமக்கிடையில் வளரும் அன்பை
பகிர்ந்து கொள்ள இதைவிட தோதான தருணம்
இனிமேல் கிடைக்கச் சாத்தியமில்லை
நாம் பகிர நினைக்கும் வார்த்தைகள்
கூச்சத்தின் நடுவில் சிக்கி
மூச்சுத் திணறி இறந்து போகின்றன
எனது மனசுக்குள் நுழையத் தெரியாமல் நீயும்
உனது மனசுக்குள் நுழையத் தெரியாமல் நானும்
கிடந்து தவிப்புறுகிறோம்
இத்தனைக்கும் நமது மனசின் கதவுகள்
சந்தித்த முதல் நாளிலிருந்து
அகலத் திறந்துதான் கிடக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதவிடுக்குகளினிடை நசிபடும் புள்ளப் பூச்சி

கசந்த தேநீர் துளியிலிருந்து
வளரத் துவங்குகிறது
அம்மாவிற்கும் அப்பாவிற்குமிடையிலான முறுகல்
பின்னரது வாக்குவாதமாக முற்றி
தேநீர் குவளையின் சில்லுகளென
வீடு முழுவதும் சிதறுகின்றன
வழமைபோல பெருக்கெடுக்கும்
சண்டையில் எவ்விடத்திலும்
குறுக்கறுக்கவில்லை சிறுமி
ஆயினும் அவள் மீதுதான்
பச்சாதாபமின்றி தகாத சொற்களால்
இருவரும் மாறி மாறி எறிந்து
கோபத்தை ஆற்றுகின்றனர்
தட்டானின் மனசை ஒத்தவளுக்கு
எறியப்படும் வார்த்தைகளின்
அர்த்தம் புரிந்து விடவா போகிறது
கடைசிவரை எதற்காக
எறிவாங்குகிறோமென அறியாமலே
அம்மாவின் மடியிலும்
அப்பாவின் மார்பிலும்
சாய்ந்து அன்பை பரிமாறுகிறாள்
கள்ளங்கபடமற்ற சிறுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்த்தமற்று வளரும் பிணக்கு

அருகருகில் இருந்தும்
ரயில் தண்டவாளமென
இருவரும் பிரிந்திருக்கிறோம்
நம் இதயத்தின் கதவுகள்
தாழிடப்பட்டிருக்கிறது
என்னிடம் பேசாமல் நீயும்
உன்னிடம் சிரிக்காமல் நானும்
மௌனம் சாதிக்கிறோம்
நமக்கிடையில் நிலவும் மௌனம்
நமது பிள்ளைகளின் நிம்மதியை
நாளடைவில் சிதைத்து விடுகிறது
அவர்களை சமாளிப்பதற்காக
நேசமாக இருப்பதுபோல்
அவ்வப்போது பாசாங்கு புரிகிறோம்
இருந்தும் நாளுக்கு நாள் அர்த்தமற்று
வளர்ந்து கொண்டே செல்கிறது
நமக்கிடையிலான பிணக்கு
இப்போது பிள்ளைகள்
பாசாங்கு செய்ய நம்மிடமிருந்து
கற்றுக் கொள்கின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவின் அமைதியை உடைக்கும் பாடல்

மயான அமைதி நிலவும் இந்நேரம்
ஒரு கவிதைக்காக தனித்திருக்கிறேன்
ஆவி பறக்க தயாரித்து வைத்த
தேநீர் கோப்பையில்
உதிர்ந்த வர்ணங்கள்
ஓவியம் வரைகிறது
கொட்டும் பனியில்
பின்னிப் புரண்டு
சில்லென்று வீசும் காற்று
என்னை இதமாக தழுவிச் செல்கிறது
மின்மினி பூச்சிகளென
கண் சிமிட்டும் விண்மீன்களும்
யானையின் தந்தமென நீந்தும்
மூன்றாம் பிறையும்
கண்களுக்கு விருந்தளிக்கிறது
மரங்களும் பேசாமல்
மௌனித்திருக்கும்
என் இரவின் பேரமைதியை
சட்டென உடைத்து விடுகிறது
தொலைவில் அறிமுகமற்ற
ஒரு நேயர்
வானொலியில் விரும்பிக் கேட்கும் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெருட்டி

என் சோளக் காட்டை
நாசம் செய்ய வரும்
கிளிக் கூட்டங்களை விரட்டியடிக்க
மனித சாயலில்
ஒரு பொம்மையை செய்து
காவலுக்கு நிறுத்தினேன்
வழமை போன்று வந்த கிளிகள்
வெருட்டியின் மடி மீதமர்ந்து
அலகை உரசி கதை பேசிவிட்டு
கதிர்களையும் கொறித்துச் சென்றன
சிலது பொம்மையின் குடலை உருவி
பொந்தமைத்து கூடு பின்னி
குடும்பமாக வாழத் துவங்கின
தொலைவில் ஒலிக்கும்
பூனையின் ஊசிக் குரல் கேட்டு
பயந்தஞ்சி தாவித் தாவி கத்தும்
என் வீட்டு கிளி ஞாபகம் வந்தது
உடன் பூனையின் சாயலில்
ஒரு பொம்மையினை வடிவமைத்து
சோளக் காட்டில் நிறுத்தி விட்டு
மறுநாள் வந்து பார்த்தேன்
கிளிகளின் குரல்கள் கேட்கவில்லை
எதுவென்றாலும் தகுதியானவர்களை
நியமிக்கும் பட்சத்தில்தான்
எல்லாமே சாத்தியமாகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடையக் காத்திருத்தல்

ஊதி பெருத்துடையக் காத்திருக்கும்
சவர்க்காரக் குமிழி நான்
வானவில்லின் வர்ணங்களை
கன கச்சிதமாக
எனக்குள் வரைந்து வைத்துள்ளேன்
காலமெனும் காற்று
நிச்சயமெனை உடைத்தே தீரும்
எப்போது உடைக்குமென்றுதான்
அனுமானிக்க முடியாதுள்ளது
காற்றில் மிதக்கும்
அச்சிறு கணங்கள்தான் எனக்கென்று
விதியாக்கப்பட்ட ஆயுளாகும்
காற்று நெருங்குவதற்கிடையில்
ஆகக் குறைந்த பட்சம்
ஒரு குழந்தையின் கண்ணையாவது
கவர்ந்து விட்டு உடைதலில்தான்
என் வாழ்வும் அர்த்தமுள்ளதாகிறது
ஏனெனில் உடையக் காத்திருக்கும்
சவர்க்கார குமிழி நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவை திறந்து படித்தல்

இரவின் கதவைத் திறந்து
உள்ளே சென்று பார்க்கிறேன்
விரவிக் கிடந்தன கனவுகள்
உடன் ஒவ்வொன்றாக
வாசித்துப் பார்க்கிறேன்
எல்லாமே நிறைவேறாக்
கனவுகளாகத்தான் இருந்தன
அது யாருடைய கனவென்று
அடையாளம் காண்பதற்கிடையில்
சூரியன் எழுந்து விடுகிறது
அது என்ன கனவாக இருக்கும்
அக்கனவின் இலக்கை
அவர்கள் அடைந்திருப்பார்களா
இன்னும் இல்லையா
அறிந்திட பரபரப்புடன்
பகலின் வாசலில் காத்திருக்கிறேன்
கருப்பு நிறப் பூனையென
பதுங்கிப் பதுங்கி வருகிறது இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறி விழும் நிலவு

நதியில் தவறி விழும் நிலவு
ஒரு போதும் பதட்டமுறுவதில்லை
அது தவறி விழும்
ஒவ்வொரு தருணத்தையும்
தனக்கு வாய்த்த
அரிய சந்தர்ப்பமெனக் கருதுகிறது
பின்னர் நீந்தப் பழகுவதுடன்
ஆசை தீர நீருமாடுகிறது
மீன்களின் பாடலையும்
மெய் மறந்து இரசிக்கிறது
நிலவு வானத்திலிருந்து
இரவின் நதியில் தவறி வீழ்வது
இது எத்தனையாவது முறையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தையற்ற அம்மா

பொம்மைகள் விற்கும் கடையில்
பணி புரியும்
குழந்தையற்ற அம்மா
அந்த பொம்மைகளை
எப்படி அணுகுகிறாளோ
இதுவரை பிறக்கா குழந்தையினை
அம்மாவிற்கு நினைவூட்டாமலா
போய்விடும் பொம்மைகள்
கடையிலிருந்து பிரிந்து செல்லும்
ஒவ்வொரு பொம்மை மீதும்
நிச்சயம் படிந்திருக்கக் கூடும்
குழந்தை பற்றிய
அம்மாவின் தீரா ஏக்கமும்
எல்லையற்ற கருணையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயல் குட்டியென மேயும் காலை வெயில்

பழுப்பு வர்ண முயல் குட்டியென
வீட்டு முன்றலில்
தினமும் பிரசன்னமாகி
மேய்கிறது காலை வெயில்
விண்மீன்களென
கண் சிமிட்டும் பனிக் குடங்கள்
உடைந்து வழிதலில்
நலைந்து தொப்பாகி நிற்கும்
புற்களின் தலைகளை
இதமாக துவட்டி விடுகிறது
வளர்ப்பு பிராணியென
வாசலில் மேயும் வெயிலை
தேநீர் அருந்த அழைக்கிறாள் சிறுமி
அதற்கிடையில் வெயில்
மேய்ந்து திரிந்த இடத்தை
உடன் நிரப்பி விடுகிறது
முன்றலில் நின்றிருந்த மரம்
இவ்வாறு மேய்ந்து திரிவதும்
மாலையானதும் இரவின் மடியில்
உறங்கச் செல்வதுமாக
சுறுசுறுப்பாக இயங்குகிறது வெயில்
இன்னுமதன் பசி தீர்ந்தபாடில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானத்தை தகர்த்த சிறுவன்

சலனமற்ற நதியென
வானம் தகதகக்கும் போதெல்லாம்
அதனை ஒரு முறையாவது
நீந்திக் கடக்க வேண்டுமென்று
அவாவுற்றிருந்தான் சிறுவன்
அனிச்சையாக நதியில் மிதக்கும்
வானத்தை கண்டதும் குதித்து
தீரா ஆசையை நிவர்த்தி செய்கிறான்
அதற்குப் பின்னர் நிகழ்ந்த
எதனையுமே அவன்
கருத்தில் எடுக்கவில்லை
வானம் துண்டம் துண்டமாக
உடைந்து சிதறி இருந்தது
கரையில் நின்றிருந்த
வயது முதிர்ந்த மரங்கள்
முறிந்து வீழ்கின்றன
சம்பவங்கள் எதனையுமே
அலட்டிக் கொள்ளவில்லை சிறுவன்
நீந்த நீந்த அடுக்கடுக்காக
உடைந்து கொண்டே இருந்தன
வானமும் மரங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரமேற்றி வைத்த சொற்கள்

அறையின் சன்னலூடாக
திருட்டுப் பூனையென
நுழைந்த காற்று
மேசை மீது அடுக்கி வைத்திருந்த
வெற்றுத் தாள்களை
அள்ளியெறிந்து விளையாடியது
புரவியென திமிறும் காற்றை
என்னால் கட்டுக்குள்
கொண்டு வர முடியவில்லை
உடன் அறை முழுவதும்
விரவிக் கிடந்த தாள்களை எடுத்து
அதன் மீது
ஒரு கூடைச் சொற்களை
பாரமேற்றி வைக்கிறேன்
தாள்களை அசைத்தசைத்துப் பார்த்து
அலுத்துச் சலித்த பின்னர்
தெறிப்பை காட்ட முடியாதென்று
திரும்பிச் சென்று விட்டது காற்று
இப்போது ஒழுங்கு குலையாமல்
நிரைப்படுத்தி வைத்தவாறு
செம்மையாக இருக்கிறது அறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொந்தரவு செய்யும் ஓவியம்

சாலை மருங்கில் நடப்பட்டிருக்கும்
விளம்பரப் பதாகையில்
வரையப்பட்டிருக்கும் தேவதை
கடமைக்கு செல்லும் போதும்
திரும்பி வரும் போதும்
தினமும் மறக்காமல் காத்திருந்து
என்மீது புன்னகை வீசுகிறாள்
அக் கணங்களிலெல்லாம்
சலனமாகிறதென் மனசின் குளம்
பதிலுக்கு ஓர் தடவையேனும்
துளியுண்டு புன்னகைக்க
மனம் ஏனோ அவாவுறவில்லை
எனக்கு மட்டும் புன்னகை சொரிந்திருந்தால்
பதிலுக்கு புன்னகைக்க வாய்பிருந்திருக்கலாம்
இருந்தும் யாருடைய சாயலிலுமற்ற
மீள மீள பார்க்கத் தூண்டுகிற
புதாகையில் சிரித்தபடி நிற்கும்
தேவதையின் ஓவியம்
இத்தனை வேலை பழுக்கல்கிடையும்
என்னை தொந்தரவு செய்யாமலில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமரசம் நிலவும் மனது

அவர்கள் இருவருக்குமிடையில் நிகழ்ந்த
பழைய சம்பவமொன்று துளிர்த்து
எல்லை மீறி
வளர்ந்து கொண்டிருந்தது கதை
ஒரு கட்டத்தில் கதை முற்றி
கீரியும் பாம்புமென சமரிட்டன
புதினம் பார்த்துக் கொண்டிருந்தால்
இருவரும் பரம எதிரிகளாகலாம்
உடன் அத்துமீறி நுழைந்து
அவர்கள் வசமிருந்த
கட்டுக்கடங்கா சொற்களை அணுகி
சாந்தப் படுத்தினேன்
குழந்தைப் பருவத்திலிருந்து
எடுத்து வளர்த்த பூனைகள் போல்
மௌனம் சாதித்தன சொற்கள்
இப்போது இருவருக்குமிடையில்
நிலவுகிறது சமரசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையினை சமாளிக்கும் சிறுமியின் ஓவியம்

விடுமுறையை கொண்டாட
ஊருக்கு புறப்படும் அவசரத்தில்
தனது பிரியமிகு பொம்மையினை
மறந்து விடுகிறாள் சிறுமி
எப்படியும் எடுத்துவர முடியா
தனது கரடி பொம்மைக்கு
பேச்சுத் துணைக்கு
யாரும் இல்லையென்று
கவலையும் கொள்கிறாள்
உடன் அறைச் சுவற்றில்
தன்னை வரைந்து விட்டு
மனதை ஆற்றுப்படுத்தியவாறு
சிரித்த முகத்துடன் வருகிறாள்
விடுமுறை முடிந்து
வீடு திரும்பும் வரைக்குமான
பொழுதுகளில்
பொம்மையின் தனிமையினை
சிறுமியின் ஓவியம்
கண்களால் பேசிச் சமாளிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களவாடப்படும் நிழல்கள்

மரத்தை திட்டமிட்டு
கொலை செய்து
திருடிச் செல்பவன்
தனியே மரத்தை மட்டும்
திருடிச் செல்வதில்லை
எனக்காக விரித்து வைத்திருந்த
நிழலையும் சேர்த்துத்தான்
திருடிச் செல்கிறான்
இப்போது மரம் நின்றிருந்த வெற்றிடத்தில்
வளர்ந்து நிரம்புகிறது வெயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்களின் தேவதை

என் கவிதைக்குள்
பட்டாம் பூச்சியென
நுழைகிறாள் சிறுமி
வரிகளினிடையே ரசிப்பதற்கு
கண்களை பறிக்கும்
வண்ணமிகு பூக்களெதுவும்
முகிழ்ந்திருக்கவில்லை
பயங்கரம் சூழ்ந்து
இரத்தமும் சதையுமென
அமைதியற்றிருந்தது கவிதை
உடன் கவிதைக்குள்ளிருந்து
தப்பித்து வந்து
பெருவெளியை தரிசித்தாள்
ஒரு தொகை பட்டாம் பூச்சிகள்
அவளை மொய்க்கையில்
பூக்களின் தேவதையானாள் சிறுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகைப்படத்தில் அழும் குழந்தை

தொடரூந்து நிலையம் முன்றலில்
நடப்பட்டிருக்கும்
இராட்சதப் புகைப்படத்தில்
கீரிட்டுக் கத்தும் குழந்தையை
எப்படி ஆற்றுப்படுத்துவதென்று
யாருக்கும் தெரியவில்லை
பயணிகளின் நெரிசலில்
தவறவிட்ட அம்மாவை
எதிர்பார்த்து அழுகிறதா
அன்றி தாங்கொணா
பசியில் நாவரண்டு கத்துகிறதா
எதுவுமே புரியவில்லை
இந்நேரம் என்னை எதிர்பார்த்தபடி
அம்மாவின்
அரவணைப்பிலிருக்கும்
என் குழந்தையை
அசப்பில் நினைவூட்டியவாறே
காட்சியளிக்கிறது
காது கன்னம் வைக்க முடியா
தொடரூந்துகளின் கத்தலையும் மீறி
ஓயாதழுது புலம்பும் குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியின் உடைந்த குடை

வீட்டின் ஒதுக்குப் புறமாக
அநாதரவாக கிடக்கிறது
சிறுமியின் உடைந்த குடை
அதன் சீலையில்
வரையப்பட்டிருக்கும் வானவில்
இப்போதும் சாயம் போகாமல்
அப்படியே ஒளிர்கிறது
குடை உடைந்த கணங்களில்
தவறி விழுந்த கண்ணாடியென
நிச்சயம் உடைந்திருக்க கூடும்
சிறுமியின் நுங்கு மனதும்
மழை பொழியும் இந்நேரம்
பட்டாம் பூச்சியென பறந்து சென்று
வெளவாலின் சிறகென கிடக்கும்
குடையை விரித்துப் பார்க்கிறாள்
கடந்த மாரி காலத்தில் பெய்த
இறுதி மழை துளியின் வாசனை
சிறுமியை நனைத்து விடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கண்களுக்குள் நீந்தும் மீன்கள்

தொட்டியில் நீந்தும்
வர்ண மீன்களின் அழகை
வியந்து இரசித்து
ஒரு கணம் நானும் மீனானேன்
மீன்கள் என்னை கவனிக்காது
வளர்த்து வந்த நதியை
அடையும் தீரா வேட்கையில்
சளைக்காமல் நீந்துகிறது
ஒவ்வொரு முறை நீந்தும் போதும்
இம்முறை எப்படியாவது
நதியை அடைந்து விடலாமென்ற
மாபெரும் நம்பிக்கையில்தான் நீந்துகின்றன மீன்கள்
ஆனால் தனது பூர்வீக வெளியை
இன்னும் மீன்களால்
அடைய முடியாதுள்ளது
கண்ணாடிச் சுவற்றில் மோதி
திரும்பி வரும் ஒவ்வொரு முறையும்
தொட்டியாகிறது என் கண்கள்
இனி என் கண்களுக்குள்
நீந்தக் கூடும் மீன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைக்கு வரும் ஒற்றையடிப் பாதை

பழுப்பு நிற பூனைக் குட்டியென
விண்மீன்கள் புடைசூழ
மேய்ந்து திரிகிறது பால்நிலவு
ஓயாது கொட்டும் பனியில்
கொடுகி விறைத்தவாறு
சுருண்டு படுக்கிறது
அடர்ந்த மரங்களிடை வசிக்குமென்
நூற்றாண்டு வயது முதிர்ந்த ஊர்
தொலைவில் புணர்தலுக்காக
அழைப்பு விடுக்கும்
கட்டாக்காலி வாலாட்டிகள்
ஊரினது ஆழ் துயில் கலைத்து
பீதியை ஏற்படுத்துகிறது
உதிரும் நிலவின் ஒளியில்
தங்கச் சரடென மின்னும்
ஒற்றையடிப் பாதையூடே
மிகு பதட்டத்துடன் தன்னந் தனியாக
இருப்பிடம் நோக்கி செல்கிறேன்
அச்சம் தவிர்த்து வழித்துணையாக
வழமைபோல் கூடவே வருகிறது
ஒற்றையடிப் பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமி கசக்கியெறிந்த மரம்

காற்று உரத்து வீசும் போது
இலைகள் சலசலக்கும் சப்தம்
அறை முழுவதும் கேட்கிறது
உடன் கவுட்டுக் கொட்டுகிறேன்
ஒரு சருகையும் காணவில்லை
பின்னர் சிறுமியின்
படிப்பு மேசையின் கீழாக
கசக்கி கிடந்த தாளை
எடுத்து பிரித்துப் பார்க்கிறேன்
அது அவள் வரைந்து பார்த்து
திருப்தியற்று எறிந்த மரம்
ஒளியற்று பழுப்பு நிறத்தில்
சாகும் தருவாயில் வாடி நின்றது
சற்று தாமதித்து ஓவியத்தை
திறந்து பார்த்திருந்தால்
மூச்சு முட்டி இறந்திருக்கும் மரம்
உடன் என் வசமிருந்த
நிறங்களாலும் கோடுகளாலும்
ஓவியத்தை பூர்த்தி செய்கிறேன்
காற்று சடசடத்து புணர்ந்து
இலைகள் சிலிர்த்து நிற்கிறது
இனி தொலை தூரப் பறவைகள்
சிறுமியின் மரத்தில் தங்கி
கூடு பின்னி வாழ்ந்திடல் தகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையை வாசிக்க அவாவுறும் குழந்தைகள்

குழந்தைகளுக்கு மழையை
படிப்பதிலிருக்கும் ஆர்வம்
வேறெதிலும் இல்லைதான்
வாசிக்கத் தெரியாவிட்டாலும்
ஒவ்வொரு துளியாக கூட்டி வாசித்து
மழையோடு மழையாகின்றனர்
ஆனால் அம்மாக்கள்தான் மழையின்
ஒரு துளியை கூட வாசிக்க விடாது
அவர்கள் பெய்யப் பெய்ய
அறையில் பூட்டி வைக்கிறார்கள்
அன்றி அவர்களது கண்களில்
பெய்யும் மழையை தணிக்கவென
உடன் குடையை விரித்து
வெளியில் அனுப்புகிறார்கள்
தனது பிரதியின் பக்கங்களை
முதலில் குழந்தைகளிடம்தான்
விரித்து வைக்க அவாவுகிறது மழை
இதனை ஒரு போதும்
புரிவதில்லை ஈரமிகு அம்மாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானத்தை கடந்த சிறுமி

அடை மழைக்குப் பின்னராக
நிலவுகிறது பேரமைதி
இராட்சத சர்ப்பமென
ஊர்ந்து செல்லும்
சாலை நடுவிலும் மருங்கிலும்
இடைக்கிடை சிமிட்டுகிறது குழிகள்
சாலையின் புண்களென கிடக்கும்
குழிகளை கடந்து விட்டு
ஏழு வானங்களையும்
சுலபமாக கடந்து விட்டதாக
சப்தமிட்டுச் சொன்னாள் சிறுமி
உடன் திறந்து கிடந்த குழிகளை
உற்றுப் பார்க்கிறேன்
மழை நிரம்பியிருக்கும்
அதற்குள் மிதக்கிறது வானம்
இப்போது சந்தோசத்தின் உச்சத்தில்
சிறுமியின் கண்களுக்குள்ளும் விரிகிறது
எல்லையற்ற வானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலை

வாழ்தலின் அடுக்கடுக்கான
நெருக்குதல் நிமித்தம்
அலைந்து திரிந்து
அலுத்துச் சலித்த மட்டில்
பொந்துகளில் இளைப்பாறும்
நண்டுகளின் தனிமையினை
கரைக்கு வரும்
ஒவ்வொரு முறையும்
சிறு உறுத்தலுமின்றி கலைத்தபடிதான்
திரும்பிச் செல்கிறது அலை
தனக்கெதுவுமே தெரியா
எதோ ஒன்றைப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிமையிலிருக்கும் குடை

கத்திக் கூச்சலிட்டுப் பெய்கிறது
கன மழை
அது தனித்திருக்கும் சிறுவனை
வெளியில் செல்ல விடாது
சிறைப்படுத்துகிறது
ஓயாது உரத்துப் பெய்கையில்
அறையின் இமைகளினூடாக
தூவானம் அடித்து
தொப்பாகிறான் சிறுவன்
சுவரில் வரைந்திருக்கும்
குடையை எடுத்து
விரித்துச் செல்லத் தெரியாது
கொடுகி விறைக்கிறான்
அதற்கிடையில் வீட்டினுள்
அத்துமீறி நுழைந்த வெள்ளம்
சிறுவனை அடித்துச் செல்கிறது
இப்போது பாழடைந்த
வீட்டின் சுவற்றில்
மழைக்குப் பிடிக்க யாருமற்று
தனிமையிலிருக்கிறது குடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்கள் பேசும் மொழி

நமக்கிடை அறியாமல்
வளர்ந்து கொண்டிருக்கும் நேசத்தை
பகிர்ந்திடத் தயங்குகிறது மனசு
தொடரியின் தண்டவாளமென
இருவரும் அருகருகில் இருந்தும்
ஒரு வார்த்தையேனும் உதிர்த்தாமல்
மௌனம் சாதிக்கிறோம்
நமது மௌனத்தினிடை
பேசுவதற்கும் பகிர்வதற்குமென
பிரியம் மீந்த வார்த்தைகள்
கூடை கூடையாக இருக்கிறது
இருந்தும் யாருமற்ற சூழலிலும்
சன நெரிசல்களினிடையும்
சந்திக்கும் போதெல்லாம்
பள்ளிக் காதலை கண்களால் மட்டுமே
சொல்லிக் கொள்கிறோம்
கண்களால் பேசும் போது
உணரப்படும் எல்லையற்ற
நேசத்தின் பரவசத்தை
வார்த்தைகள் பரிமாறும் போது
பெரிதாக உணர முடிவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீரையென வாடும் அப்பாவின் மனசு

குடிசையின் வயிறுகள்
வாடாமல் இருக்கவே
கீரை விற்று திரிகிறார்
வாடிய வயதிலும் அப்பா
அதிகாலை பிடுங்கிய
கீரைக் கத்தைகளினிடையே
வாடாமல் ஒளிர்கிறது
அன்றாடங்களின் பருக்கைகள்
நேரம் உதிர உதிர
வாடத் துவங்குகிறது
குடிசையின் மலர்ந்த முகம்
கீரை விற்று தீரும் வரை
வெயிலில் வாடியே கிடக்கும்
தெருத் தெருவாக
அலைந்து திரியும் அப்பாவின் மனசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டைச் சுற்றி ஓடும் மனசு

விடுமுறை முடிந்து
விடுதிக்கு திரும்பி விட்டேன்
அம்மா இறுதியாக பரிசளித்த
அன்பு முத்தமது ஈரம்
இன்னும் உலரவில்லை
அப்பாவிற்கு தெரியாமல்
பாட்டி கைச் செலவிற்கு
ரகசியமாக தந்த பணமும்
கைவசம் இருக்கிறது
இருந்தும் மனசு மட்டும்
குழந்தைப் பராயத்திலிருந்து
எடுத்து வளர்த்து வந்த
சாம்பல் நிறப் பூனையை துரத்தியபடி
வீட்டை சுற்றியே
இன்னும் ஓடித் திரிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசி

தீரா பசியை ஆற்றிடவே
புழுவிற்கு ஆசைப்பட்டு
தூண்டிலில் மாட்டி
துடிக்கிறது மீன்கள்
தூண்டில் காரனும்
தனது பசியை ஆற்றிடத்தான்
மீன்களை பிடிக்கிறான்
தூண்டில் காரனினதும்
மீன்களினதும்
அடங்காப் பசிகளுக்கிடையில் சிக்கி
இரையாகிறதென்னவோ
அப்பாவி மண் புழுக்கள்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதுக்குள் கொதிப்புறும் சொல்

வழமைக்கு மாற்றமாக
மேசை மீது தேநீரை
சட்டென வைத்து விட்டு
முகத்தை திருப்பியவாறு
விரைந்து செல்லும்
மனைவியின் மனசுக்குள்
தீராக் கோபம்
கடும் வெறுப்பு
மிகு அதிருப்தியென
என் மீது வெளிப்படையாக
எய்திட முடியா
சொல்லியும் ஆற்றவியலா
ஏதோ ஒரு சொல்
ஆவி பறக்க
தயாரித்து வைத்திருக்கும்
தேநீர் மாதிரி
நிச்சயம் இந்நேரம்
கொதித்துக் கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வனத்தின் வரைபடம்

குறுக்கும் மறுக்குமாக
சடைத்து நிற்கின்றன
சிறிதும் பெரிதுமான மரங்கள்
இத்தனை நெரிசல்களினிடையும்
மீளக் கூடடைய
வழி தப்பி அலைவதில்லை
இரை தேடிச் சென்ற பறவைகள்
குழந்தைப் பராயத்திலிருந்து
பறவைகளின் நினைவுகளில்
வரையப்பட்டிருக்கிறது
வனத்தின் பூர்வீக வரைபடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம்

செம்படவனும் வலை பின்னுகிறான்
சிலந்தியும் வலை பின்னுகிறது
செம்படவன் மீன்களை பிடிக்கிறான்
சிலந்தி பூச்சிகளை பிடிக்கிறது
வாழ்தலின் எதிரும் புதிருமான
சிக்குகளை அவிழ்க்கத்தான்
காலத்தோடு போராடி
பின்னப்படுகிறது வலை
இதில் பச்சாதப்படுவதற்கும்
வீண் பழி சுமத்துவதற்கும்
பெரிதாக ஒன்றுமில்லை
முறையே எழுதி வைத்திருந்த
விதியைத்தான்
நிறைவேற்றியிருக்கிறது காலம்
மீன்களும் பூச்சிகளும் பெருகும்
அதே கணம் வலை பின்ன
காலத்தை ஏவ
கடவுள் மறந்து விடுவானா என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலின் நிறம் மேகமா

ஆதியிலிருந்து நீலத்தை
கடலில் கரைத்து வருகிறது மேகம்
ஆனால் கடலின் நிறம்
இன்னும் மாறவுமில்லை
மேகத்தின் நீலமும்
தீர்ந்து போகவுமில்லை
சில வேளை
கடலில் நிறம் மாறும் போது
மேகத்தின் நிறம்
தீர்ந்து விடுமா என்ன
அயர்ச்சியுறாது கடலில்
நீலத்தை கரைத்த வண்ணம்
ஓடுகிறது மேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைகளால் அளக்க முடியா ஆகாயம்

எத்தனை நூற்றாண்டுகளாய்
ஆகாயத்தை
அளந்து பார்க்கிறது பறவை
இன்னும் அதனால்
சரியாக அளக்க முடியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சருகை வாசித்த பறவை

மரத்திலிருந்து பிரிந்த சருகொன்று
காற்றின் கைகளில் சிக்கி
பெருவெளியெங்கும் அலைவுற்று
காற்று சோர்வடைந்த கணங்களினிடை
அதன் பிடியிலிருந்து விடுபட்டு
ஒதுக்குப் புறமாக இளைப்பாறுகிறது
அநாதரவாக கிடக்கும்
அதன் இரண்டு பக்கங்களினையும்
புரட்டிப் புரட்டிப் பார்க்கும்
அது வழியாக வந்த பறவை
எதைத்தான் வாசிக்கிறதோ
அம்மரத்தில் வசித்த காலங்களில்
எழுதி வைத்த
மறக்கடிக்க முடியா குறிப்புகளையா
அன்றி மரம் நிற்கும் முகவரியையா
எதுவுமே புரியவில்லை
கால முதிர்ச்சியில் நிறம் தூர்ந்து
நரம்புகள் தெரியக் கிடக்கும் சருகால்
பெரிதாக எதனைத்தான்
நினைவில் வைத்திருக்க முடியும்
உறங்கியிருந்த காற்று
சோம்பேறி முறித்தெழுகையில்
திக்குத் தெரியாது பறக்கிறது சருகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேநீரில் இனிப்பென கலந்திருக்கும் அன்பு

நடு நிசியும் கடந்து மூன்றாம் ஜாமத்தில்
உறக்கம் அலைக்கழிந்தவாறு
கண்கள் கனிய விழித்திருக்கிறேன்
தினசரி வாழ்வின் தீரா அலைச்சலும்
நெருக்கடி குறித்தும் சிந்தித்து
வீட்டு திண்ணை நெடுகிலும்
குட்டியீன்ற பூனை மாதிரி
நடந்து திரியும் இந்நேரம்
கொட்டும் பனியை பொருட்படுத்தாது
கைகள் விறைக்க நீலம் பாரித்து
கொடுகிச் சிலிர்த்தபடி
ஆவிபறக்க தயாரித்து வழங்கும்
தேநீரில் நிச்சயம் இனிப்பென
கலந்திருந்திருக்கக் கூடும்
என் வாழ்வின்
தொடர்ச்சியாக வந்தவளின்
பரிசுத்தமான அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வனத்தை தரிசித்தல்

இது கால வரையிலும்
ஒரு முறையாவது வனத்தை
தரிசிக்கவில்லையெனும்
பெரும் ஆதங்கம் இருந்த போதும்
என் மகவுகள் தூழியில் உறங்கும் போதும்
நான் சாய்வு நாற்காலியில்
அசதியில் சாயும் போதும்
அதன் மூதாதையர்களோடு
மிக நெருக்கமாக
பழகுவதாகவே உணர்கிறேன்
இருப்பினும் வீட்டின்
அறைக் கதவுகளை
இழுத்துச் சாத்துகையில் மட்டும்
வயது முதிர்ந்த மரமொன்றின்
அழுகுரல்
காற்றை ஊடறுத்து
இடைக்கிடையே கேட்பதாகவே
என்னால் உணர முடிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்களை திறந்து விடுதல்

இரகசியமான சில சொற்களை
எனது மௌனக் கூண்டினுள்
அடைத்து வைத்திருக்கிறேன்
அது எனது சிறையிலிருந்து விடுபட
அயராது போராடுவதை
என்னால் உணர முடியாமலில்லை
அதனை திறந்து விட்டால்
பிரளயங்கள் ஏற்படலாமென அஞ்சி
ஆதியிலிருந்து தவிர்த்தும் வருகிறேன்
இருந்தும் அச்சொற்களானது
எனது பெரும் மௌனத்தையும் மீறி
தப்பியோட முனைகிறது
உடன் எனது மௌனத்தை கலைத்து
சொற்களை திறந்து விடுகிறேன்
விடுதலை கிடைத்த இரட்டிப்பு மகிழ்ச்சியில்
பெருவெளியெங்கும் பட்டாம் பூச்சியென
சிறகடித்துப் பறந்து திரிந்தன
பின்னர் உங்களின் வாசலை தரிசித்து
இரகசியங்களை பகிர நேர்ந்தால்
அதனை தயவு கூர்ந்து பத்திரப்படுத்துங்கள்
ஏனெனில் வார்த்தைகள் அபாயகரமானவை
குழப்பங்கள் ஏற்படலாமென்ற
பெரும் பீதியில் இருக்கிறேன் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரமற்றதா நதி

நதி தற்கொலை புரிய
கடலை நோக்கி கரை புரண்டோடும்
இக் கோடை இரவில்
ஒரு துண்டுப் புழுவிற்காக
மீன்கள் நாவரண்டு கிடப்பது
நதிக்கு புரியாமலில்லை
விண்மீன்கள் சகிதம்
பால் நிலவை பந்தெனப் பிடித்து
சுழித்து விளையாடிய தனது மீன்களை
அநாதரவாக தவிக்க விட்டு
கடலில் குதித்து கரைந்து போதல்
எங்கணம் சாத்தியமாகும்
உடன் தனது குஞ்சு குரால்களை
செட்டை பிடித்து அழைத்துச் சென்று
கடலிடம் ஒப்படைத்து விட்டு
தற்கொலை புரிகிறது நதி
தனது நேசமிகு மகவுகளை
இடை நடுவில் பரிதவிக்க விட்டு
கடலில் குதித்துச் சாவதற்கு
மானிடப் பதர் போன்று
அத்தனை ஈரமற்றதா நதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நதியும் சேர்ந்ததுதான் கடல்

எனது நதி நேற்றிரவு
கடலில் குதித்து
தற்கொலை புரிந்ததாக
நண்பர்கள் சொல்லி அழுதனர்
அது தற்கொலை புரியவில்லை
கடலில் சங்கமித்ததாக வேறு சிலர்
என்னை ஆற்றுப்படுத்தினர்
உடன் கடலுக்குச்
சென்று பார்க்கிறேன்
இரண்டுமே ஒன்றாக கிடந்து
ஓயாது ஆர்ப்பரிக்கிறது
புதிதாக பிரசன்மான நதியை சுருட்டியெடுத்து
கரைக்கு கொண்டு செல்வதும்
திரும்பி வருவதுமாக
விளையாடுகிறது அலைகள்
இதில் எது நதி
எது கடலென்று
பிரித்துப் பார்க்க முடியவில்லை
உண்மையில் நதி
கடலில் சங்கமித்ததா
அன்றி தற்கொலை புரிந்ததா
எனக்கு எதுவுமே புரியவில்லை
ஆனால் இரண்டையுமே
கடலென்றுதான் அழைக்கிறது காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பெனும் பேரலை

ஏதுவான நிறங்கள் குழைத்தெடுத்து
கடலை அச்சொட்டாக
வரைந்து முடிக்கிறாள் ஹயா
அலைகள் எதுவுமின்றி
நதிபோல் அமைதியாக கிடக்கிறது கடல்
உடன் அவளை அழைத்து
ஏன் அலைகளை வரையவில்லை
மறந்து விட்டாயாவென அவாவுற்றேன்
அதற்கு அவள்
அவ்வாறு வரைந்திருந்தால்
இரவு ஒழுகித் தீரும் வரை
அலை ஓயாது ஆர்ப்பரித்து
வீட்டின் உறக்கத்தை
கலைத்திருக்குமென்று சொன்னாள்
அவளது கடலில் கால் நனைக்கையில்
மனசுக்குள் ஆர்ப்பரிக்கின்றன
அன்பெனும் பேரலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைந்து சிதறிய இரவு

பால்நிலவொழுகும் பின்னிரவில்
மின் கம்பியிலுறங்கும் காகங்களின் நிழல்
மேல்மாடிச் சுவரின் மீது
துல்லியமாக விழுந்து கிடக்கின்றன
பசியில் அலைந்து திரிந்த பல்லியொன்று
ஊர்ந்து செல்லும் பெயரறியாப் பூச்சியை
பிடித்துண்ணப் பதுங்குகிறது
அத்தருணம் இரவை கிழித்துக் கொண்டு
கனைத்துச் செல்லும்
இரும்புக் குதிரைகளின் குழம்பொலி
கட்டிடக் காடுகளை அதிரச் செய்கிறது
அச்சிறு கணங்களினிடை
திடுக்கிட்டெழுந்த காகங்கள்
வெறிச்சோடிக் கிடந்த சாலையினை
முறைத்துப் பார்த்த பின்னர்
தன்னை சுதாகரித்துக் கொண்டு
மீளவும் துயிலத் துவங்கின
இடைக்கிடை இவ்வாறெழும் சப்தங்களினால்
காகங்களின் நிழல் அதிர்வுறுகையில்
பல்லி பயந்தொடுங்கி
பின்வாங்கியபடியே இருந்தன
துளித்துளியாக இரவு ஒழுகித் தீரும்வரை
இச்சம்பவம் நிகழ்து கொண்டிருந்தன
பல்லி தனது பசியை ஆற்ற முடியாமலும்
காகங்கள் ஆழ்ந்துறங்க முடியாமலும்
உடைந்து சிதறின அன்றைய இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புல்லில் பனியெழுதி

நின் புல்லின் மனசின் நுனி மீது
ஒரு பனித்துளியென
பின்னிப் பிணைந்திருக்கிறேன்
என் மனசின் ஈரமானது
வரண்டு வெளிறியிருக்கும்
நின் பச்சைக்கு தெம்பூட்டுகிறது
நீ ஒரு ரோஜா மலரினைப்போல்
மிகு குளிர்ச்சியில் மலர்ந்து கிடக்கிறாய்
நின் புல்லின் மடி மீது
மெய் மறந்து தலைவைத்துறங்கும்
ஒளியின் கதகதப்பில் மயங்கி
மொய்க்கிறது பட்டாம் பூச்சிகள்
காற்று உன் தலை கோதி
இதமாக வருடிச் செல்கையில்
நின்னை இறுகப் பற்றிக்கொள்கிறேன்
இருந்தும் எல்லாவற்றையும் மீறி
நம்மைப் பிரித்து விட்டு
ஒரு பூனைபோல் பதுங்குகிறது காலப் பரிதி
உலரும் தனிமையினை ஆற்றிட
ஓர் நடுநிசியில்
அல்லதோர் அதிகாலையில்
நின் புல்லின் நுனி மீது
பனிதுளியென மீளவும் வருவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலைகள் சேகரிப்பவன்

ஒரு இலையை சேகரித்தவன்
ஒரு துளியாகிறான்
ஒரு கிளையை சேகரித்தவன்
ஒரு மிடராகிறான்
ஒரு மரத்தை சேகரித்தவன்
ஒரு குளமாகிறான்
ஒரு தோப்பை சேகரித்தவன்
ஒரு நதியாகிறான்
ஒரு வனத்தை சேகரித்தவன் கடலாகி
பின் அடை மழையுமாகி
ஈற்றில் பிரபஞ்சத்தின் நீருமாகிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்கள் எத்தகையது

சொற்கள் மனதை துன்புறுத்தும்
சொற்கள் மனதை ஆற்றுப்படுத்தும்
அது சினம் கொள்ளும் போது
மிருகத்தனமாக நடந்து கொள்கிறது
அன்புக்கு அடிமையாகும் போது
தவிப்புறும் மனசுகளுக்குள்
பட்டாம்பூச்சிகளை பறக்க விடுகிறது
சொற்களுக்கு பைத்தியம் பிடிக்கும் போது
வாழ்க்கை அர்த்தமற்றதாக்கி
பித்துப் பிடித்து தெருவில் அலைய விடுகிறது
அனிச்சையாக உதிர்த்தும் சொற்கள்
சில நேரம் பெரும் கலவரத்தை
உண்டு பண்ணும் வல்லமை மிக்கது
இரக்கமற்ற சொற்களால்
கண்களில் கண்ணீரை காய்ச்சுவதைவிட
வேறு எதனையும் சாதிக்க முடிவதில்லை
சில சொற்கள் இணைந்திருந்த
இதயங்களை பிரித்து
வேடிக்கை பார்க்கும் கத்தரிக் கோலாகிறது
வேறு சில சொற்கள் பிரிந்த மனசுகளை
இணைக்கும் ஊசியாகி மகிழ்கிறது
சொற்கள் உள்ளத்திலிருந்து
உதிர்க்கப்பட வேண்டும்
ஒரு நாயின் உள்ளத்திலிருந்து
பகிரப்படும் சொற்களில் கருணை வழிகிறது
அத்தகைய சொற்களை மட்டுமே
இசை கொடுத்து மீட்கவும் முடியும்
உனது சொற்கள் எத்தகையது
இசைக்குரியதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வை அருந்தும் மது

முதலில் ஒவ்வொரு மிடறாக
மதுவை சுவைத்து அருந்துகிறான்
காலப் போக்கில்
போதை தலைக்கேற
மதுவிற்கு அவன் அடிமையாகிறான்
அல்லது மது
அவனை அடிமைப்படுத்துகிறது
பின்னர் மது அவனையும்
அவனை மதுவுமாக
மாறி மாறி அருந்துகிறது
ஈற்றில் சொட்டும் மீதம் வைக்காமல்
அவனை அருந்தி முடிக்கிறது
இப்போது அருந்தி முடித்த
மதுக் குப்பிபோல்
காலத்தின் மீது காலியாகி உருள்கிறது
அவனது இடமும் இருப்பும்
மதுவென்பது போதையுமல்ல
வேறெதுவுமல்ல
அது நின் மரணத்தின் துவக்கப் புள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்களின் மொழி

காற்று மரங்களுடன் பேசுகிறதா
மரங்கள் காற்றுடன் பேசுகிறதா
குழம்பிப் போகிறேன் நான்
இதுவரை காலமும்
மரங்களுடன் எதுவுமே பேசாமலா
கிளையில் வசித்திருக்கும் பறவைகள்
சிலவேளை மரத்தின் மொழியை
பறவைகள் அறிந்திருக்குமா
மரம் என்னையும் பார்த்து
கிளைகளை அசைத்தசைத்து
அழைப்பு விடுக்கிறதே
அது என்னோடு
என்ன மொழியில் பேசுமோ
மரங்களின் தாய் மொழி
என்னவாக இருக்கும்
காலில் மிதிபட்டு நொறுங்குகையில்
வலி தாங்காது ஆவென்று அழுகிறது சருகு
இது யாருடைய மொழியோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் பிடிக்கத் தெரியா சிலந்திகள்

ஆதியிலிருந்து சிலந்திகளுக்கு
வலை வீசி மீன் பிடிக்க தெரியவுமில்லை
கடைசிவரை கற்கவும் இல்லை
கற்க முயற்சித்துப் பார்க்கவுமில்லை
தனது தீரா பசியை ஆற்றிட
வாழ்வை நிவர்த்தி செய்ய
இருப்பை தக்க வைக்க
காலத்தோடு போராடுகிறது
திமிறும் காற்றையும் சமாளித்து
வெயில் மழையில் நனைந்து
அயற்சியுறாது வலை பின்னுகிறது
ஆகக் குறைந்த பட்சம்
புள்ளியளவிலான பூச்சியாவது வந்து
மிக அலட்சியமாகவோ
அனாயாசமாகவோ மாட்டிக்கொள்ளுமென்று
அது திடமாக நம்புகிறது
காலம் மிக இரக்கமானது
நமக்கென்று ஒதுக்கி வைத்ததை
வழங்க தாமதிக்குமே தவிர
யாருக்கும் மறுப்பதுமில்லை
யாரையும் கைவிட்டதுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவையின் உடையா நிழல்

நதியை கடந்து செல்கின்றன
தொலை தூரப் பறவைகள்
அதன் நிழல் விழுந்த பின்னரும்
மௌனம் சாதிக்கிறது நதி
நீந்தும் பறவையின் நிழலினை
இரையென நினைத்து
பசியெடுத்த மீன்கள்
துரத்தி துரத்தி கொத்துகையில்
நதியின் மௌனம் கலைகிறது
மிரட்டும் மீன்களின்
வலையிலிருந்து தப்பித்து
தினமும் இரை தேடிச் செல்கின்றன
நதியில் விழுந்த பின்பும்
உடையாமல் செல்லும்
பறவையின் நிழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாம் பூச்சியின் ஓவியம் போலான வாழ்வு

பட்டாம்பூச்சியின் இறக்கைகளில்
இத்தனை கச்சிதமாய்
ஓவியம் வரைந்தது விட்டது யார்
எனது வாழ்வின் ஓவியத்தை
வரைந்து முடிப்பதற்கு
தினமும் காலத்தோடு போராடி
தோய்ந்து போகிறேன்
கோடுகளை வரைந்தால்
பொருத்தமான வர்ணங்கள்
இல்லாமலிருக்கிறது
வர்ணங்களை ஒன்று சேர்க்கும்போது
கோடுகள் சிதைந்து விடுகின்றன
இரண்டும் கைகூடி வரும் போது
தூரிகையின் இழைகளை
உதிர்த்தி விடுகின்றது காலம்
பட்டாம்பூச்சியாக பிறந்திருந்தால்
இந்நேரம் எனது ஓவியமும்
வரைந்து தீர்க்கப்பட்டிருக்கலாம்
கடவுள் இறக்கைகளை பரிசளித்திருந்தான்
நான்தான் வேட்கையற்று இருந்து விட்டேன்
வாழ்வின் கோடுகளினிடை
பொருத்தமான நிறங்களை
உதிர்த்திப் விட்டுப் பறக்கிறது
காலமெனும் பட்டாம்பூச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியமாகிய சொற்கள்

அப்பாமார்களினது
மருண்ட வழிகளையும்
ஓயாத அதட்டுதல்களையும்
கண்டஞ்சி பயந்தொடுங்கி
சிறு புள்ளப்பூச்சியாகி
அம்மாமார்களினது
முந்தானைப் புதருக்குள்
அவ்வப்போது ஓடி ஒளியும்
அநேக சிறுவர் சிறுமிகளினது
பகிரப்படா
ஒரு அவணம் சொற்கள்
அவர்களது அறைச் சுவர்களிலும்
சித்திரக் கொப்பிகளிலுமாக
வர்ணங்கள் குழைத்து வரைந்த
ஓவியமென வாய்விட்டுப் பேசி
சிரித்துக் கிடக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியமாகும் சிறுமி

பள்ளி சென்ற முதல் நாளன்றே
ஆசிரியராகிறாள் சிறுமி
வகுப்பறையில் ஆசிரியர் உதிர்த்தும்
விதவிதமான சொற்களையும்
கண்களை கவரும் வர்ணங்களையும்
குறுக்கும் மறுக்குமான கோடுகளையும்
அச்சொட்டாக சேகரம் செய்து
புத்தகப் பைக்குள் அடுக்குகிறாள்
பள்ளி கலைந்து
வீடு திரும்பிய கையோடு
தனது அறையை
உடன் வகுப்பறையாக்குகிறாள்
பின்னர் தனது பிரியமான
பொம்மைகளை நிரையாக அமர்த்தி
பாடம் நடாத்துகிறாள்
இரண்டு வகுப்றைகளுக்குமிடையில்
வேறுபாடு நிலவாமலில்லை
குளப்படி புரியும் மாணவர்களை
கடும் சொற்களால் வைகிறார் ஆசிரியர்
பொம்மைகளுக்கு இதழ் பதிந்த
முத்தங்களை பரிசளித்து
அன்பை மட்டுமே போதிக்கிறாள் சிறுமி
சிறுவர்களை விடவும் ஒப்புவிப்போர்
இங்கு யார்தான் உளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாம்பூச்சியின் மனசு

முன்பள்ளி வகுப்பறையில்
பகட்டு வர்ணங்களை
வெண்ணிறத் தாள்களில்
உதிர்த்திக் கொண்டும்
ஒற்றை எண்களை சதுரங்களுக்குள்
உறுட்டி விளையாடிக் கொண்டும்
இலகுவாக வாயில் நுழையும்
சிறிய சொற்களை
ஒற்றைக் கோடுகளில் துரத்திக் கொண்டும்
கள்ளங் கபடமற்று
சுதந்திரமாக விளையாடும்
சிறுவர் சிறுமியர்களுக்கு
நிச்சயம் இருக்கக்கூடும்
பட்டாம் பூச்சியின் மனசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திக்க அலைவுறும் மரணம்

எதிர்பார்த்து காத்திருக்கும் மழை
மேகத்தை திறந்து
நின் வயல் வெளிக்கு வரலாம்
அன்றி வராமலும் போகலாம்
நேர்முகப் பரிட்சைக்காக
எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஓலை
நின் வீட்டு கதவை தட்டலாம்
அன்றி தாட்டாமலும் போகலாம்
சூடிக் கொள்ளவிருக்கும்
அதிகாரத்தின் கிரீடம்
நின் சிரசை அலங்கரிக்கலாம்
அன்றி அலங்கரிக்காமலும் விடலாம்
ஏலவே நிச்சயிக்கப்பட்ட
நின் திருமணம் குறித்த திகதியில்
மிக அமர்க்களமாக நடக்கலாம்
அன்றி நடக்காமலும் போகலாம்
எதிர் பார்த்திரா மரணம் மட்டும்
தவறுதலாக விசையமுத்தப்பட்ட
ஒரு துப்பாக்கி ரவையின் இரைச்சலிலோ
விபத்தில் சிக்குண்டோ
நோய்மையில் கிடந்தோ
முதுமை முட்டியோ
இயற்கையாகவோ
செயற்கையாகவோ
ஒரு கணம் முந்தாமலும்
ஒரு கணம் பிந்தமாலும்
விதியின் பிரகாரம்
நின்னை வந்து சந்தித்தேயாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தமிட்ட மழை

வாலாட்டிகளும் அடங்கி
பேய்களும் வெளிவரா நடு நிசியில்
கூரையூடாக அத்து மீறி இறங்கி
என்னை தட்டி எழுப்பி
தூக்கத்தை கலைத்து விடுகிறது
துளியும் ஈரமற்ற மழை
சிறு உறுத்தலுமின்றி
தூக்கம் கலைத்த மழை மீது
சினம் பெருக்கெடுத்த போதும்
அதன் குழந்தை முகம்
அணை கட்டி அடக்கி விடுகிறது
திருட்டுப் பூனையென
படுக்கையறை நுழைந்த மழையை
துரத்தி விட மனசின்றி
பாத்திரத்தில் அமர்த்துகிறேன்
பின்னர் நானும் மழையுமாக
சூரியன் நெட்டி முறித்தெழும் வரை
தேநீர் அருந்தியவாறு
நலைந்து பேசிக் கொண்டிருந்தோம்
ஒவ்வொரு துளியாக
அறைக்குள் இறங்கி வந்து
கை குலுக்கி முத்தமிட்டது மழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குட்டி ஈன்ற கதை

வழி தப்பி வந்த ஆட்டுக் குட்டிபோல்
காற்று வாக்கில் என் காதுக்குள்
நுழைந்து கொண்டதொரு கதை
அது எங்கிருந்து வந்ததென்று
விசாரிக்க அவகாசமில்லை
அனாதரவாக வந்த கதையை
உடன் அழைத்து சென்று
சலூன் கடையில் விரவிக் கிடக்கும்
மயிர்களின் நடுவே விட்டு விட்டு
திரும்பி வருகிறேன்
வீடு வந்து சேர்வதற்கிடையில்
எனக்கு முன்னர் பிரசன்னமாகி
வீட்டை புரட்டிப் போட்டது
பின்னர் என்னிடம் நெருங்கி வந்து
பால்ய கால நண்பன்போல
வேறொரு சாயலில் உரையாடியது
தாமதியாது வீட்டை விட்டு
வெளியில் வந்து பார்க்கிறேன்
ஊரெங்கும் வகை தொகையற்று
வெவ்வேறு ரூபத்தில் அலைந்து திரிந்தன
சிறு கணங்களினிடை ஆர்ப்பாட்டமின்றி
எத்தனை குட்டிகளைத்தான் ஈன்றிருக்கிறது
நான் விட்டு விட்டு வந்த கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவை சிரிக்க வைக்கும் சிறுமி

மருண்ட விழிகளுடன்
விடுதி வாடன் போல
வீட்டைக் கண்காணித்து
கட்டுக்குள் வைத்திருக்கிறார் அப்பா
தெரியாமல் காலில் மிதிபட்ட
புள்ளப்பூச்சிபோல
மூச்சற்றுக் கிடக்கிறது வீடு
கண்டிப்பான அப்பாவை
சிரித்த முகத்துடன்
தினமும் பார்க்க அவாவுறும் சிறுமி
புகைப்படம் எடுக்கிறாள்
சிறுமி புகைப்படம் எடுக்க
தயாராகும் போதெல்லாம்
தன் கோடை முகத்தை
சிரித்த முகத்துடன் வைத்திருக்க
தவறுவதில்லை அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கிடுதல்

தங்க மணிகளென மின்னி ஒளிரும்
எல்லாக் கதிர்களையும்
எங்கணம் வீடு கொண்டு சென்றிடல் தகும்
சிலதை குருவிகள் தின்னும்
சிலதை நீரடித்துச் செல்லும்
சிலது விலா வயலுக்குள் சிதறும்
மேலும் சிலது பதராகிப் பறக்கும்
இவ்வாறுதான் நமக்கு வாய்க்கப்பட்ட
ஒரேயொரு வாழ்வும்
ஆலிசமாவதைத் தவிர
சிலதை உடன் பிறப்புகளுக்கும்
சிலதை நெருங்கியவர்களுக்கும்
சிலதை நேசிப்பவர்களுக்கும்
சிலதை கடந்து செல்பவர்களுக்குமாக
பங்கிட வேண்டி உள்ளது
நம்மில் எத்தனை பேர்
நெற்கதிர்களாக இருக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையை புரிதல்

மாரி காலங்களில்
குடையை எடுத்துச் செல்ல
மறந்து போன சிறுவர்கள்
வீட்டுக்கு திரும்பி வரும்போது
சட்டைப் பைகளில் மழையை
நிறையவே எடுத்து வருகிறார்கள்
அத்தனை தடவைகள் ஞாபகமூட்டியும்
அவர்கள் குடையை
எடுத்துச் செல்லாத காரணம்
மழையில் நனைய
வேண்டுமென்பதை தவிர
நிச்சயம் வேறொன்றுமில்லை
மழையை யாருக்குத்தான் பிடிக்காது
அதற்கு எதிராக குடை விரிக்க
அது ஓர் இனிமையான மொழி
அது ஓர் இனிமையான இசை
அது ஓர் இனிமையான பாடல்
மழையை சரியாகப் புரிந்து நடந்து
நேரம் போவது தெரியாமல்
அதனோடு மனம் விட்டுப் பேசி
நெருங்கிப் பழகியது போல
இங்கு சிறுவர்களை விடவும்
வேறு யாரும் பழகியதில்லைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கானல் நீரில் தொலையும் வாழ்க்கை

துடைத்து வைத்த கோப்பைகளென
நீரேந்து பிரதேசங்கள்
வரண்டு கிடக்கும் இந்நேரம்
நிலவும் கடுங்கோடையின்
தாங்கொணா வெம்மையில்
தீரா தாகமெடுத்த பறவைகள்
ஒரு மிடர் நீருக்காக
காடு மேடெல்லாம் அலைந்து திரிந்து
அலுத்துச் சலித்த பின்னர்
கூடு திரும்பி வருகையில்
பாலைவெளியின் குறுக்கே
தொலைவில் தெரிவது
சிறு குட்டையென்றெண்ணி
உற்று உற்றுப் பார்ப்பதெல்லாம்
கானல் நீரைத்தான்
நம்மிடையே சில பறவைகள்
வாழ்வை தொலைத்து நிற்கும்
நிர்க்கதியான சூழ்நிலையில்
மாயைகளை நம்பி
ஏமாந்து போகாமல் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜன்னலின் வழியே

ஜன்னல்கள் அகலத்
திறந்து கிடப்பதனையே
அனேகமாக விரும்புகிறது அறை
அது இழுத்துச் சாத்தப்படும்
ஒவ்வொரு முறையும்
அதற்கு மூச்சுத் திணறல்
ஏற்படாமல் இல்லை
காற்றை நேசிப்பதற்காக
யாரும் ஜன்னல்களை
முற்றாக வெறுக்காதீர்கள்
அகலத் திறந்து கிடக்கும்
ஜன்னல்கள் ஊடாகத்தான்
இந்த தங்க உலகை
நாம் வியந்து இரசிக்கிறோம்
பிறவியிலிருந்து நடக்க
முடியாத ஒருத்தனுக்கு
ஜன்னலென்பது கால்களாகும்
அறையின் பேரழகே
அதன் குட்டிக் குட்டி ஜன்னல்கள்தான்
ஜன்னல்களற்ற அறைகளை
பெரிதாக யாரும் விரும்புவதில்லை
நம்மில் எத்தனை பேர்
நமது இதயத்தின் ஜன்னலை
தூய்மையுடன் திறந்து வைத்திருக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றிப் போதல்

நேற்று உதித்த சூரியனும்
இன்று உதித்திருக்கும் சூரியனும்
வேறு வேறானதல்ல
நேற்று விரிந்த வானமும்
இன்று விரிந்திருக்கும் வானமும்
வேறு வேறானதல்ல
நேற்றுப் பறந்து திரிந்த காற்றும்
இன்று பறந்து கொண்டிருக்கும் காற்றும்
வேறு வேறானதல்ல
ஆனால், அலையும் நமது மனசுதான்
புதிது பழசென
அதனை பிரித்துப் பார்க்கிறது
நேற்றென்பது
நேற்றோடு தீர்ந்து போனாலும்
நேற்றைய சூரியனும்
நேற்றைய வானமும்
நேற்றைய காற்றும்தான்
இன்றைக்குள் விழுந்திருக்கிறது
நாம் அதனை
நிராகரிக்கிறோமா என்ன
அது போலத்தான்
நமக்கு வாய்த்த நேற்றைய வாழ்வும்
ஒன்றிப் பயணித்தால்
இன்றில் இருளிருக்க வாய்ப்பில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதித் தீர்க்கப்படாது
## தீட்டி முடிக்கும் பென்சில்கள்

ஹயாவிற்கு பென்சில்
வாங்கிக் கொடுக்கும்
ஒவ்வொரு தருணமும்
எல்லா எழுத்துக்களையும்
மிக நேர்த்தியாக
எழுதித் தீர்ப்பாளெனும்
மாபெரும் நம்பிக்கையோடுதான்
வாங்கிக் கொடுக்கிறேன்
எனது எதிர்பார்ப்பை போன்றே
எல்லாப் பெற்றோர்களும்
பிள்ளைகளுக்கு பென்சில்களை
வாங்கி கொடுக்கின்றனர்
ஆனால், திருப்தியாக
எழுதித் தீர்க்கப்படாமலே
முன்பள்ளி வகுப்பறையில்
தீட்டி முடிக்கப்படுகிறது
அனேகமான பென்சில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின் சிலந்தி வலை

காலத்தின் சிலந்தி வலையில்
சிறு பூச்சியென
சிக்குண்டு தவிக்கிறேன் நான்
என் மீது விதியாக்கப்பட்ட
ஒரேயொரு ஆயுள்
நிரந்தரமற்றதென்று தெரிந்திருந்தும்
வலையிலிருந்து மீண்டு வர
அயற்சியுறாது போராடுகிறேன்
கூட்டிலிருந்து தப்பிக்காதவாறு
மீளவும் மீளவுமென
படுதீவிரமாக வலை பின்னுகிறது
காலத்தால் ஏவி விடப்பட்ட சிலந்தி
அது என்னை தீன்று தீர்ப்பதற்கான
எல்லாக் காரியங்களையும்
செவ்வெனே காய் நகர்த்துகிறது
காலத்திற்கு பசியெடுக்கும்
ஒவ்வொரு முறையும் வெள்வேறு பூச்சிகளை
ஏற்பாடு செய்கிறது சிலந்தி
நான் காலத்தின் சிலந்தி வலையில்
எத்தனையாவது பூச்சியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகடிக்கும் கடல்

முதன் முதலாக அலைகளை
வியந்து ரசித்த சிறுவன்
கடலை ஒரு இராட்சத
பறவையாக பார்க்கிறான்
பின்னர் கடல்
ஆதியிலிருந்து பறக்க
எத்தனிப்பதாக சொல்கிறான்
அதே கணம் இன்னும் அதனால்
பறக்க முடியவில்லையென்றும்
மனம் வருந்துகிறான்
சிலவேளை ஓயாது
எழுவதும் வீழ்வதுமான
கடலின் கட்டுக்கடங்கா அலைகள்
அவனுக்கு சிறகுகளாக
தெரியவும் வாய்ப்பிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியின் அச்சம்

விருப்பமிகு பறவைகளை
வரைவதற்கு முன்னர்
அதனை அச்சொட்டாக
வரைந்து தீர்த்தால்
உடன் பறந்து விடுமென்று
நினைத்துப் பயந்தே
இன்னும் வரையத் துவங்காமல்
நிறங்களை பார்த்தவாறு
இருக்கிறாள் சிறுமி
அவளின் மனசின் வனத்தில்
வசிக்கின்றன பறவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருளை வாசிக்கும் குழந்தைகளின் சிரிப்பு

கள்ளங் கபடமற்ற
செல்லக் குழந்தைகளின்
வெல்லச் சிரிப்பினில்
நிதம் கரைந்து போகிறேன்
அவர்களென் நுதல் பொட்டிலிடும்
நுங்கிதழ் பதிந்த
இடையுறா முத்தங்களை உணரும்
எல்லையற்ற பரவசத்தின் கணங்களிடை
ஒரு தொகை மின்மினிகள்
என் மனசின் இருளை வாசித்தபடி
கண்சிமிண்டிப் பறக்கின்றன
அருந்தருந்த தெவிட்டாமலிருக்கும்
திராட்சைப் பழச்சாற்றின்
தீராச் சுவையினை ஒத்தது
மின்மினிகளின் இதழ் சிந்தும் சிரிப்பு
அச்சிரிப்பினில் ஒளி நிரம்பி
பீரிட்டு வழிவதனால்
குழந்கைள் வசிக்கும் வீடுகளில்
இருளிருக்க சாத்தியமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு துண்டுக் கடல்

சரிந்து விழும் அலைகளில்
சிறு அலவனென
கால் கழுவிய பின்னர்
அதனை துளியும்
பிரிய மனமின்றி
வீடு திரும்பிக்கொண்டிருக்கும்
சிறுமியின் கால் விரல்களினிடையில்
சிக்கியிருக்கக் கூடும்
ஒரு துண்டுக் கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருளை வாசித்த ஹயாவின் ஓவியம்

மின்சாரமும் சற்றென அறுந்து
பால் நிலவும் எங்கோ தலைமறைவாகி
விண் மீன்களும் கண் சிமிட்ட மறந்து போன
இக்கோடை இரவினில்
இருளில் மூழ்கிக் கிடக்கிறது வீடு
நிலவும் கும்மிருட்டை வாசிக்கவென
உடன் ஒரு மெழுகுவர்த்தியை
ஏற்றி வைக்கிறேன்
அதனை பதுங்கியிருந்த காற்று வந்து
அணைத்து விட்டுச் செல்கிறது
மீளவும் மீளவுமென ஏற்றி வைக்கிறேன்
தன் பிறவிக் குணத்தை
காட்டிக்கொண்டே இருந்தது காற்று
இதனை அவதானித்த மட்டில்
தனது சித்திரக் கொப்பியில்
ஏலவே வரைந்து வைத்திருந்த
மின்மினிப்பூச்சிகளின் ஓவியங்களை
பறக்க விடுகிறாள்
வீடு முழுவதும் பெருக்கெடுத்தது ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியம் வரையும் பட்டாம்பூச்சிகள்

ஆதியிலிருந்து வர்ணங்கள மட்டுமே
உதிர்த்துத் திரிகின்ற பட்டாம்பூச்சிகளானது
தன் இறக்கைகளில்
எத்தனையெத்தனை வர்ணங்களை
வைத்திருக்கின்றதோ தெரியவில்லை
கேட்டுத் தெரிந்து கொள்ள
அதன் மொழியும் எனக்குத் தெரியவில்லை
கண்களை சுண்டி இழுக்கும்
பகட்டு வர்ணங்களை ஏந்திக் கொண்டு
என்னை கடந்து செல்லும்
ஒவ்வொரு முறையும் மனசின் சுவரின் மீது
ஏதாவது ஒரு ஓவியத்தை
வரைந்து செல்லத் தவறுவதில்லை
வர்ணங்கைகளை நினைக்கும் போதெல்லாம்
உடன் என் மனசுக்குள் பட்டாம்பூச்சிள்தான்
பாட்டம் பாட்டமாக பறக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சு மிட்டாய் விற்பவன்

மிட்டாய் விற்பதற்கு முன்னராக
குழந்தைகள் அழும் வீடுகளையும்
நடமாடும் தெருக்களையும்
தேடித் தேடி அறிந்து கொள்கிறான்
பின்னர் அவர்களின்
சாயை விழும் இடங்களை
கடக்கும்போது மட்டும்
கரகரத்த குரலில்
உரத்துக் கூறிச் செல்கிறான்
மிட்டாய்களை அழுது அடம்பிடித்து
வாங்கிச் சுவைக்கும்
குழந்தைகளால்தான் சிரிக்கிறது
அவனது தினசரி வாழ்வு
பஞ்சு மிட்டாய் விற்பவனுக்கு
குழந்தைகளின் வீடுகளை தவிர
அனேகமாக வேறெதுவுமே
ஞாபகங்களில் இருப்பதில்லை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்றாடங்களில் கண்டு நாம் கடந்து போகின்ற சம்பவத் துண்டங்களை கவிதையினுள் வார்த்தல் என்பது எல்லோராலும் எளிதில் சாத்தியமாகாதது. அவ்வாறு கொண்டு வருவதனூடாக அந்நிகழ்வு அற்புதங்களால் பூரணத்துவமாகி விடுகிறது. அது ஜமீலின் இப்பிரதியினுள் நிகழ்ந்திருக்கிறது.

கவிதை எங்கும் நிரம்பி வழிகின்ற சொற்கள் அத்தனையும் பளிங்கு இழையினாலான கண்ணாடி சுவர் மீது பட்டுத் தெறித்து ஒளிர்கின்றன.

நிகழ்நிலையில் புலப்படுகின்ற அன்றாடக் காட்சிகளினூடாக சொற்களின் வனாந்தரத்தை வாசகனுக்குள் பரவச் செய்து பரவசத்தாலான ஓர் உலகத்தை அவன் ஆழ் மனத்துள் கட்டமைக்கும் வித்தையினை 'பறவையின் உடையா நிழல்' சாத்தியமாக்கியிருக்கிறது.

ஜமீலின் இத்தொகுதியில் குடியேறியிருக்கும் பாடுபொருள்கள் அலாதியானதும் குதூகலம் மிக்கதுமாகும். கவிதையில் அலைகின்ற காட்சிகள் வாழ்வின் பல்வேறு கூறுகளையும், ஒழுங்குகளையும் எம்முள் படியச் செய்து கவிதைக்கு தனித்துவத்தை வாரிக் கொடுக்கின்றது.

■ நஸார் இஜாஸ்

புதுப் புனைவு

ISBN 978-624-98763-0-9

9 786249 876309

விலை: 400/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org